# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ அதி விசேஷமானது**

**අංක 2418/ 17 - 2025 ජනවාරි මස 07 වැනි අඟහරුවාදා - 2025.01.07**

**2418/17 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (1) ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 1984.06.08 ஆம் திகதிய 300/14 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1984 ஆம் ஆண்டின் 122 ஆம் இலக்க 1984.05.28 ஆம் திகதிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்ட காணித்துண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கீழே விபரிக்கப்பட்ட காணித்துண்டின் இருப்பாட்சி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. ஆகையால், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், காணி எடுத்தற் சட்டத்தின் 39(1) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், 1984.06.08 ஆம் திகதிய 300/14 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1984 ஆம் ஆண்டின் 122 ஆம் இலக்க 1984.05.28 ஆம் திகதிய இக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கிறேன்.

கே.டி லால் காந்த,<br>
கமத்தொழில், கால்நடை வளங்கள்,<br>
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல.: :4-3/9/2024/PC දඹුල්ල පූජා භූමි - අවසතු / ප්‍රත්‍යාදිෂ්ය<br>
பிரதேச செயலாளர் இல.: 5/3/4/1/27/931-02<br>
கமத்தொழில், கால்நடை வளங்கள்,<br>
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,<br>
“மிஹிகத்த மெதுர”,<br>
காணிச் செயலகம்,<br>
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,<br>
பத்தரமுல்லை.<br>
2024, திசெம்பர் 04.


1A - G43441 - 11(2025/01)



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், தம்புள்ள மேலதிக மாவட்ட செயலாளர் பிரிவில் தம்புள்ள நகர எல்லையினுள் சிறு பிரிவில் பிரிவு இல. 01, மில்லகஹருப்ப இல. 02, பாதணிய, இல. 04 ஹீன்மொரகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 931, 1991.04.22 ஆம் திகதிய, வரைபடத்தில் பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள்:

01. **துண்டு இல. 02 – கோன்கஹமுலயாய - விஸ்தீரணம்: 0.442 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 01 ; கிழக்கு: தெம்மென்ன கால்வாய்; தெற்கு: துண்டு இல. 03; மேற்கு: நெடுஞ்சாலை.

EOG 01-0069

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2024.07.31 ஆம் திகதிய 2395/27 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 1A பக்கத்தில் மும்மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தில் 39அ(1) ஆம் பிரிவின் கீழான கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் வெளியிடப்பட்ட திகதி 2014 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆம் திகதி என்பதற்குப் பதிலாக "2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25" ஆம் திகதி எனவும் வர்த்தமானி இல. "1861/6" என்பதற்கு பதிலாக "1877/9" எனவும், "2014 ஆம் ஆண்டின் 94" ஆம் இலக்க கட்டளை என்பதற்கு பதிலாக "2014 ஆம் ஆண்டின் 214" ஆம் இலக்கம் எனவும் இலக்கக் கட்டளையில் குறிப்பிட்ட காணித்துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்படுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39(அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளின் கீழ்வரும் I ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கே.டி. லால் காந்த,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

எனது இல.: :4/3/10/2013/UDA/639.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல.:නුළු /3/18/ අත්පත්/160.
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி
மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2024, திசெம்பர் 04.

EOG 01-0070

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.